## தூத்துக்குடி அருகே

# ஈஷா வித்யா பள்ளி துவக்கம்

தூத்துக்குடி, மார்ச் 23: சத்குரு ஜக்கி வாசுதேவின் ஈஷா யோகா மையம் சார்பில் தமிழ்நாட்டின் 206 தாலுகாக்களில் தாலுகாவிற்கு ஒன்று என்ற விகிதத்தில் ஈஷா வித்யா மெட்ரிகுலேசன் பள்ளிகள் துவங்கப்பட உள்ளன.

தூத்துக்குடி தாலுகாவில் ஈஷா வித்யா மெட்ரிகுலேசன் பள்ளி புதுக்கோட்டையை அடுத்துள்ள குமாரகிரி ஊராட்சிக்குட்பட்ட சிறுபாடு கிராமத்தில் துவங்கப்பட உள்ளது. 2007-08ம் கல்வியாண்டு முதல் செயல்படவுள்ள இந்த ஈஷா வித்யா மெட்ரிகுலேசன் பள்ளியின் பூமிபூஜை வரும் 25ம்தேதி நடக்கிறது.

வ.உ.சி. கல்வி அறக்கட்டளையின் செயலாளர் சொக்கலிங்கம் தலைமை வகிக்கிறார். ஏற்பாடுகளை பள்ளி ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ண சங்கர் செய்து வருகிறார்.



குமாரசாமி பஞ்.,குட்பட்ட சிறுபாடு கிராமத்தில் ஈஷா வித்யா மெட்ரிகுலேசன் பள்ளி கட்டட பூமிபூஜை நடந்தது

# குமாரகிரி பஞ்.,ல் பள்ளி கட்டட பூமிபூஜை

தூத்துக்குடி, மார்ச் 26- தூத்துக்குடி அருகே குமாரசாமி பஞ்.,குட்பட்ட சிறுபாடு கிராமத்தில் ஈஷா வித்யா மெட்ரிகுலேசன் பள்ளி கட்டட பூமிபூஜை நடந்தது.

இவ்விழாவிற்கு ஏ.பி.சி.வி.சொக்கலிங்கம் தலைமை வகித்தார். ஆடிட்டர் கிருஷ்ணன் வரவேற்றுப் பேசினார். பின்னர் ஈஷா வித்யா கல்வி அறக்கட்டளை திட்ட ஒருங்கிணைப்பாளர் வெங்கட் பேசுகையில்; கிராமப்புற குழந்தைகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் விதமாக அவர்களுக்கு உயர் தரமான கல்வியை அளிக்கும் நோக்கத்துடன் ஈஷா யோக மைய நிறுவனர் சத்குரு ஜகி வாசுதேவ் வழிக்காட்டுதலின் படி இப்பள்ளி உருவாக்கப் பட்டுள்ளது.

செயல்முறை பயிற்சியால் மாணவர்கள் ஓராண்டிற்குள் ஆங்கிலம் சரளமாக பேசவும், எழுதவும் முடிகிறது. மேலும் அறிவியல் மற்றும் மென்பொருள் மூலம் கார்ட்டூன் படங்கள் குரல்கள் மூலமாக மிகச் சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்டு குழந்தைகளின் கவனம் முழுமையாக இருக்குமாறு கற்றுக்கொடுக்கப்படுகிறது.

பூமி பூஜையில் தூத்துக்குடி மையத்தை சேர்ந்த விவேகானந்தன், கிருஷ்ணசங்கர், ராதாகிருஷ்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.